# சென்னை மெட்ரோவில் படிப்புடன் பயிற்சி

தமிழகத்தின் தலை நகரான சென்னையில் மெட்ரோ ரயில் இயங்கி வருவது நாம் அறிந்ததே. இந்த நிறுவனத்தில் ஐ.ஐ.டி., சென்னையுடன் இணைந்து மெட்ரோ ரயில் தொடர்புடைய முது நிலை டிப்ளமோ படிப்பு வழங்குவதற்கான அறிவிப்பு வந்துள்ளது.

**காலியிடங்கள்:** இன்ஜினியரிங் தொடர்புடைய இந்தப் படிப்பில் மொத்தம் 25 காலியிடங்கள் உள்ளன. இவற்றில் சிவிலில் 16, எலக்ட்ரிகலில் 5, எலக்ட்ரானிக்சில் 3, மெக்கானிக்கலில் 1ம் காலியிடங்கள் உள்ளன.



**வயது:** 29.5.2019 அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

**கல்வித் தகுதி:** அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் மூலமாக தொடர்புடைய இன்ஜினியரிங் பிரிவில் பி.இ., அல்லது பி.டெக்., பட்டப் படிப்பை முடித்திருக்க வேண்டும். மேலும் கேட் தேர்வு மதிப்பெண்களும் தேவைப்படும்.

**ஸ்டைபண்டு எவ்வளவு ?:** இந்த இடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் மாதம் ரூ.40000/ ஸ்டைபண்டாகப் பெற முடியும்.

**விண்ணப்பக் கட்டணம்:** ரூ.500/ஐ சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேற்கண்ட பதவிக்கான விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

**தேர்ச்சி முறை:** கேட் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்ச்சி இருக்கும்.

**விண்ணப்பிக்க:** ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்க வேண்டும்.

**கடைசி நாள்:** 2019 ஜூன் 18.

**விபரங்களுக்கு:** <https://chennaimetrorail.org/>